www.padippakam.com



# பூர்த்தாடுவின் படையெடுப்பும் யாழ்ப்பாண வீழ்ச்சியும்

## தாக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

வரலாற்றுத் தொடர்

29

புவிராஜ பண்டாரம் மன்னாருக்குப் படையெடுத்துச் சென்ற போது மன்னார்க் கோட்டைக்குள் 60 போத்துக்கேயர்களும் அதற்கு வெளியே கடலில் இருந்த கப்பலில் 17 போத்துக்கேயர்களும் இருந்தார்கள். இதைவிட அவர்களது படையில் சேர்ந்து கொண்ட தமிழ் கிறிஸ்தவர்களும் - சிங்களவர்களும் கொண்ட படை ஒன்றும் அங்கிருந்தது.

புவிராஜ பண்டாரத்தின் படை முதலில் கப்பலைத் தாக்கி அழிக்க எண்ணி இருவேறு திசைகளில் இருந்து பீரங்கித் தாக்குதலை நடாத்தியது. துரதிஷ்டவசமாக தமிழர் படையின் பீரங்கி இலக்குத் தவறியதால் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டுகள் தமிழர் படையின் மத்தியிலேயே விழுந்து பெரும் சேதத்தை உண்டாக்கியது. அந்த நேரத்தில் நோயாளிகளை ஏற்றிக்கொண்டு போத்துக்கேயக் கப்பல் ஒன்று அங்கே வர, கோட்டையில் இருந்தவர்களுக்கு மேலதிகப் படை உதவிக்கு வருவதாக எண்ணி மருண்டுபோன தமிழ்ப் படை பின்வாங்கியது. இதைப் பயன்படுத்தி போர்த்துக்கேயர்களும் அவர்களதுகூலிப் படைகளும் தமிழர் படை மீது அகோரத் தாக்குதலை நடத்தினார்கள்.



இந்தத் தாக்குதலில் கடலில் மூழ்கியவர்களும் வெட்டுப்பட்டவர்களும் குண்டடிபட்டவர்களுமாக தமிழர் படையில் இரண்டாயிரம் பேர்கொல்லப்பட்டுவிட, புவிராஜ பண்டாரம் உயிர் தப்பி நல்லூருக்குத் திரும்பிச் சென்றான்.

ஆனால் அவன் அத்தோடு பயந்து அடங்கிவிடவில்லை. மீண்டும் மன்னாரைக் கைப்பற்றுவதற்காக தென்னிந்தியாவில் இருந்த கட்டை மூசா மரக்காயர் என்ற கடற்கொள்ளைக்காரருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு கி.பி. 1591-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி 12 ஆயிரம் படைவீரர்களோடும், பீரங்கிகள், கால்துவக்குகளோடும் படையெடுத்து வந்து மாதோட்டக் கரையில் முகாமிட்டான். கடும் காற்றால் ஏற்பட்ட கடற் கொந்தளிப்பால் கட்டை மூசாவும் அவன் படைகளும், சொல்லியபடி உரிய நேரத்தில் வந்து சேரவில்லை. எனவே புவிராஜ பண்டாரம், அவனுக்காகக் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்றெண்ணி தனது படைகளுடன் வள்ளங்களிலும், கட்டு மரங்களிலும் கோட்டையைச் சுற்றியிருந்த கால்வாயைக் கடந்து அதை முற்றுகையிட்டான்.

பகல் முழுவதும் தொடர்ந்து சண்டை நடந்தது. கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேய தளபதியான நுனா பெர்னாந்து (NUNA FERNANDEZ DE ATTAIDE) சளைக்காது சண்டையிட்டு புவிராஜ பண்டாரத்தின் படைகளுக்கு பலத்த சேதத்தை உண்டாக்கினான். போர்த்துக்கேயப் படை கோட்டைக்குள் பாதுகாப்பான நிலையில் இருந்து கொண்டு தாக்குதல் நடத்தியதால், வெளியில் நின்று சண்டை செய்த தமிழர் படைக்கு அதிக இழப்பு ஏற்பட்டது. இதைக் கண்ட புவிராஜ பண்டாரம் பகற் சண்டையை நிறுத்தி விட்டு இரவுச் சண்டையைத் தொடங்கினால் தம் பக்கம் இழப்பைக் குறைத்து கோட்டையை உடைத்து உள்ளே புகுந்து போத்துக்கேயரை வெற்றி கொள்ளலாம் என நினைத்தான். அவ்வாறே தமிழர் படை பிற்பகலில் கோட்டையில் இருந்து பின்வாங்கிச் சென்றுவிட்டு. இரவு மீண்டும் வந்து தாக்கியது. ஆனாலும் போத்துக்கேயப்படை பலமான நிலையில் இருந்ததால் புவிராஜ பண்டாரத்தின் முயற்சி பயனளிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அவன் படையெடுப்பைக் கைவிட்டு மன்னாரில் உள்ள கிறிஸ்தவர்கள் சிலரைக் கைது செய்துகொண்டும், அவர்களது மாடுகளைப் பிடித்துக் கொண்டும் நல்லூருக்குத் திரும்பினான். அவனது வள்ளங்களில் 28-ஐ போர்த்துக்கேயர்கள் பறித்துவிட்டனர்.

புவிராஜ பண்டாரத்தின் இந்தப் படையெடுப்பு முயற்சி பற்றி மன்னாரில் இருந்த போர்த்துக்கேயத் தளபதி, ஏற்கனவே கோவாவில் இருந்த தமது தலைமையகத்துக்கு அறியப் படுத்தினான். அங்குள்ள தலைமைத் தளபதி கிறிஸ்தவ சபையுடன் ஆலோசித்து மன்னாரையும் காப்பாற்றி யாழ்ப்பாண அரசன் புவிராஜ பண்டாரத்தின் கர்வத்தையும் அடக்க வேண்டும் எனத் தீர்மானித்து, அந்திரே பூர்த்தாடு து மென்தோன்சா (ANDRE FURTADO DE MENDONZA) என்பவனை இருபது கப்பலுடன் அனுப்பி வைத்தான்.

கி.பி. 1591 செப்டெம்பர் மாதம் 9-ம் திகதி கோவாவில் இருந்து புறப்பட்ட பூர்த்தாடு கொழும்பு வழியாக கற்பிட்டிக்கு அண்மையில் இருந்த காரைதீவு என்னும் இடத்துக்கு வந்தபோது, அங்கே கட்டை மூசாவின் 28 மரக்கலங்கள் கரையோரத்தில் கட்டி நிற்பதைக் கண்டான். உடனே தனது கப்பல்களை அந்தத் திசையில் செலுத்தி நங்கூரமிட்டுவிட்டு படகுகளில் விரைந்து சென்று அந்த மரக்கலங்களை கைப்பற்றியதோடு, முஸ்லிம் படையில் இருந்த சிலரையயும் கைதுசெய்துகொண்டு திருபினான். கட்டை மூசாவும் அவனது தளபதிகள் சிலரும் பூத்தாடுவின் கையில் அகப்படாது தப்பியோடி விட்டனர்.

அதன் பின், மன்னாருக்கு வந்து சேர்ந்த பூர்த்தாடு அங்கிருந்த கிறிஸ்தவ மதகுருமாருடனும், தளபதிகளுடனும் ஆலோசித்து கோவாவில் இருந்த போத்துக்கேய தேசாதிபதியின் விருப்பப்படி கி.பி. 1591 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துச் சென்றான். 1400 போத்துக்கேயர்களையும், விக்கிரம சிங்க முதலி என்னும் சிங்கள சேனாதிபதியின் தலைமையில் கொழும்பில் இருந்து வந்த 'லாஸ்கொறின்' என்ற மூவாயிரம் சிங்களப் படையினரையும் கொண்ட இந்தப் படையணி 43 மரக்கலங்களிலும், 250 வள்ளங்களிலும் ஏறி யாழ்ப்பாணம் சென்றது.

இந்தப் படையெடுப்பை அறிந்த புவிராஜ பண்டாரம், அரியாலைக் கரையிலும் கொழும்புத்துறைக் கரையிலும் அரணமைத்து பீரங்கிகள், காற்துவக்குகளோடு காத்திருந்தான். பூர்த்தாடு கொழும்புத்துறையில் தனது படையை இறக்க முயற்சி செய்தபோது, புவிராஜ பண்டாரத்தின் படைகள் தாங்கள் அமைத்திருந்த அரணுக்குப் பின்னிருந்து சன்னங்களையும், தீக் குண்டுகளையும், அம்புகளையும் ஏவி பூர்த்தாடுவின் படை, கப்பல்களில் இருந்து கரை இறங்காமல் தடுக்க முயற்சித்தான். ஆயினும், பூர்த்தாடுவின் படைகள் பீரங்கிகளில் இருந்து குண்டு மாரி பொழிந்து தமிழர் படையின் அரணை உடைத்து, 150 போத்துக்கேயரையும் விக்கிரமசிங்க முதலியின் தலைமையில் 250 சிங்களவர்களையும் தரையிறக்கினான். அவர்கள் தமிழர்களின் படை மேல் தாக்குதலை நடத்தி தமிழர் தளபதியான பிராங்கோ முதலியாரையும் 250 தமிழ் போர் வீரர்களையும் கொன்று, இரண்டு பீரங்கிகளையும் 300 துப்பாக்கிகளையும் கைப்பற்றினார்கள். அதன்பின், போத்துக்கேயப் படை முழுவதும் தரையிறங்கி கடற்கரை வழியாக அணிவகுத்துச் சென்று, சென் டொமினிக் (ST. DOMINIC) என்னும் திருக் கன்னியர் மடத்துக்கு அருகாமையில் முகாமிட்டது. அன்றிரவு அந்தப் படை, அருகில் இருந்த இஸ்லாமியரின் வர்த்தகசாலை ஒன்றுக்குள் புகுந்து 10 ஆயிரம் கண்டி நெல்லையும், 400 கண்டி அரிசியையும் கொள்ளையடித்தது.

ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி காலை போத்துக்கேயப் படை நல்லூரை நோக்கிப் புறப்பட்டது. அங்கு அரண்களுக்குப் பின்னால் நின்ற தமிழர் படை குண்டு, அம்பு, தீக்குண்டு, கவண், கல்லு முதலியவைகளை போத்துக்கேயப் படை மேல் ஏவியது. யானைக்கொடி ஏந்திய போர்த்துக்கேயப் படைக்கும் நந்திக்கொடி தாங்கிய தமிழர் படைக்கும் இடையில் அதிகாலையில் ஆரம்பித்து காலை பத்து மணிவரை உக்கிரமான சண்டை நடந்தது. இறுதியில் தமிழர் படைக்கு தலைமைதாங்கிய புவிராஜ பண்டாரத்தின் மருமகனான காகு (கொன்னையன் என்ற அர்த்தத்தில் போர்த்துக்கேயரது பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சொந்தப்பெயர் தெரியவில்லை) கொல்லப்பட்டுவிட, போர்த்துக்கேயப் படை வெற்றி முழக்கமிட்டவாறு முன்னேறியது.

வீரமாகாளி அம்மன் கோவிலுக்கும் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் இடையில் அந்தப் படை வந்தபோது, புவிராஜ பண்டாரத்தினுடைய மெய்க்காப்புப் படை அதனை எதிர்த்து கடும் சமர் புரிந்தது. ஆயினும் போர்த்துக்கேயர்களின் பீரங்கி வேட்டுக்களுக்கும் துப்பாக்கி வேட்டுக்களுக்கும் தாக்குப் பிடிக்க முடியாமல் அந்தப் படை முழுவதும் இறந்துபட்டது. இந்தச் சண்டையில் 'யோகி' ஒருவரும், நல்லூர் கந்தசாமி கோயில் பூசகரும்கூடக் கொல்லப்பட்டனர்.

அத்தோடு யாழ்ப்பாண அரச வம்சத்தைச் சேர்ந்த பெரியபிள்ளையின் மகனான எதிர்மன்னசிங்க குமாரனும் படுகாயமடைந்து நிலத்தில் வீழ்ந்தான். சில போத்துக்கேய வீரர்கள் அவன் காதில் அணிந்திருந்த தங்கக் காதணிகளை காதோடு சேர்த்து அறுத்து அவனைக் கொல்ல முற்பட, சீமாபின்னோ (SIMAO PINNAO) என்ற போத்துக்கேய வீரன் அவனது நெஞ்சில் காலை ஊன்றி அவனைக் கொல்ல விடாது தடுத்து, தளபதி பூர்த்தாடுவிடம் ஒப்படைத்தான். அவன் அந்த அரசகுமாரனுக்கு அடைக்கலம் கொடுத்து, தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அவன் கழுத்தில் போட்டு, பட்டுப் பீதாம்பரப் போர்வையால் மூடி, இறகுகளால் சோடிக்கப்பட்ட தொப்பியை அவன் தலையில் அணிவித்து அவனைக் கௌரவித்தான். (இந்தச் செய்தி இரத்தின புரி சமன் தேவாலயச் சுவரில் பொறிக்கப்பட்டிருக்கின்றது)

அதன் பின், பூர்த்தாடு நல்லூர் கந்தசாமி கோவிலுக்குள் ஒளித்திருந்த புவிராஜ பண்டாரத்தைப் பிடித்துவரச் செய்து, அவன் தலையை வெட்டி ஓர் ஈட்டியிலே குத்தி அங்கிருந்த பிரபல்யமான சந்தி ஒன்றிலே நிறுத்தி வைத்தான்.

(தொடரும்)

- நக்கீரன்